# நாட்டுப்புறத்திற்கான சட்டத் தொகுப்பு

## *மரியாதை - பாதுகாப்பு - மகிழ்ச்சி*

### பொது மக்களுக்கான ஆலோசனை

சாவகாசமாக நடந்து செல்லுதல் அல்லது ஓய்வாக பிக்னிக் முதல் நீண்ட தூரம் நடக்குதல் அல்லது இதயத்தைத் துடிக்க வைக்கும் துணிகரச் செயல் வரை, இன்பம் பெறவும் மற்றும் ஓய்வளிக்கவும் நாட்டுப்புறம் ஒவ்வொரு வாய்ப்பையும் அளிக்கிறது.

நாட்டுப்புற பூங்காக்கள், கடற்கரைகள், கானகங்கள், ஆறுகள் மற்றும் காடுகள், மற்றும் நடந்தும், சைக்கிளிலும் அல்லது குதிரையின் மீதும் பொது மக்கள் செல்லக்கூடிய ஆயிரக்கணக்கான மைல்கள் தூரமுள்ள சாலைகளும் சைகைகள் வழி காட்டும் வழிகளும் உள்ளன. மலை, பொட்டல் பெருவழி, புதர் அடர்ந்த சமவெளி, மேட்டு நிலப்பரப்பு மற்றும் பொது நிலம் போன்ற நாட்டுப்புறத்தின் மற்ற சில இடங்களிலும் நீங்கள் நடக்கலாம்.

- **பாதுகாப்பாக இருங்கள் - முன்பே திட்டமிட்டு, சைகைகள் இருந்தால் அவற்றைத் தொடருங்கள்**
- **கதவுகள் மற்றும் இடங்களை நீங்கள் பார்த்த மாதிரியே விட்டு விடுங்கள்**
- **செடிகளையும் விலங்குகளையும் பாதுகாக்குங்கள். உங்கள் குப்பையை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்**
- **உங்கள் நாயை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்**
- **மற்றவர்களையும் கருதுங்கள்**

நாட்டுப்புறத்திற்கான சட்டத்தினை நீங்கள் பின்பற்றினால், சிறப்பான இன்பத்தை அனுபவிப்பதோடு, இப்பொழுதும் எதிர்காலத்திற்கும் நாட்டுப்புறத்தைப் பாதுகாக்க நீங்கள் உதவி செய்யலாம்.

### பாதுகாப்பாக இருங்கள் - முன்பே திட்டமிட்டு, சைகைகள் இருந்தால் அவற்றைத் தொடருங்கள்

இருக்குமிடத்திற்கு அருகிலேயே சென்றாலும், எங்கு எப்பொழுது செல்லலாம் என்று தகவல்களைப் பெற்று செல்லுங்கள். எடுத்துக்காட்டாக, வேலை நடக்கும் பொழுது, அல்லது பாதுகாப்புக் காரணங்களுக்காக அல்லது இனப்பெருக்க நேரங்களில் திறப்பு வெளிகளின் சில இடங்களுக்கு நீங்கள் அனுமதிக்கப்படாமல் இருக்கலாம். ஆலோசனையை ஏற்று, எதிர்பாராதது நடக்க தயாராக இருங்கள்.

- தற்போதைய வழிகாட்டிகள் அல்லது பயணவழி விளக்கக் கையேடுகளைப் பார்க்கவும், அல்லது **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தைப் பார்க்கவும் அல்லது உள்ளூர் தகவல் மையத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- உங்களுக்கும் உங்கள் கவனிப்பில் இருக்கும் அனைவருக்கும் நீங்களே பொறுப்பானவர். மற்ற நிகழ்ச்சிகளிலும் வானிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டாலும் நீங்கள் தயாராக இருங்கள். தேவையான பொருட்கள் மற்றும் பாதுகாப்பு பற்றி குறிப்பிட்ட ஆலோசனை அளிக்கும் சங்கங்களின் இணைப்புகளைத் தரும் **www.countrysideaccess.gov.uk** என்ற இணைதளத்தைப் பாருங்கள் அல்லது வெளிப்புற பொழுதுபோக்கு செயல்கள் அளிக்கும் குழுக்களின் பட்டியலை விசிட்டர் இன்பார்மேஷன் சென்டர்கள் மற்றும் நூலகங்களில் பெறவும்.
- கிளம்பும் முன்பு அன்றைய வானிலை எவ்வாறு இருக்குமென்பதைத் தெரிந்து கொண்டு செல்லவும். தேவையெனில் திரும்பி வருவதற்குத் தயங்காதீர்கள்.
- நாட்டுப்புறத்தின் கவர்ச்சியே அனைத்திலிருந்தும் விடுபட்டு தனித்து செல்வதற்காகும். பல மணி நேரங்களுக்கு நீங்கள் யாரையும் பார்க்காமல் போகலாம். பல இடங்களில் மொபைல் போன் சிக்னல் கிடைக்காமல் போகலாம். அதனால் நீங்கள் எங்கு போகிறீர்கள், எப்பொழுது திரும்பி வருவீர்கள் என்று யாரிடமாவது கூறி விட்டுச் செல்லுங்கள்.
- நடைவழிகளையும் திறந்த வெளியையும் காட்டும் சைகைகள் மற்றும் குறிகள் என்னவென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தைப் பார்க்கவும்).

## கதவுகள் மற்றும் இடங்களை நீங்கள் பார்த்த மாதிரியே விட்டு விடுங்கள்

தயவு செய்து நாட்டுப்புறத் தொழில் வாழ்க்கையினை மதிக்கவும். ஏனெனில் நமது செயல்கள் மக்களின் அன்றாட வருமானம், நமது கலாச்சாரம், மற்றும் கால்நடைகள், நம்முடைய பாதுகாப்பு மற்றும், விலங்குகள் மற்றும் நமது நல்வாழ்வுகளை பாதிக்கலாம்.

- ஒரு விவசாயி வழக்கமாக கால்நடைகளுக்காக கதவை மூடியே வைத்திருப்பார். ஆனால் சில நேரங்களில் அவை தங்களின் உணவு மற்றும் தண்ணீருக்காகச் செல்ல அதைத் திறந்து வைத்து இருப்பார். கதவுகளைக் கண்டவுடன் அதனை விட்டு விலகிச் செல்லவும் அல்லது சைகைகளில் உள்ள அறிவுரைகளைக் கடைபிடிக்கவும். குழுக்களாகச் சென்றால் கடைசியாக செல்பவர் கதவுகளை எவ்வாறு வைக்க வேண்டுமென்பதை அறிந்தவறாக இருப்பார் என்பதை உறுதி செய்து கொள்ளவும்.
- சைகை ஒன்று சட்ட விரோதமாகவோ அல்லது தவறான திசைக்குக் கொண்டு செல்வதாகவோ நினைத்தால், (எடுத்துக்காட்டாக, 'தனியார்-பொது வழியல்ல' என்று ஒரு பொது நடைபாதையில் இருக்கலாம்) உள்ளூர் அரசாங்கத்தினரிடம் தொடர்பு கொள்ளவும்.
- பயிர்கள் விளையும் இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகளைப் பின்பற்றிச் செல்லவும்.
- எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் கதவுகளையும் நடைபாதைகளையும் பயன்படுத்தவும். சுவர்கள், மடைகள் மற்றும் வேலிகள் மீது ஏறுவது, அவற்றைச் சேதப்படுத்தும். மேலும் பண்ணைக் கால்நடைகளை வெளியே தப்பிச் செல்லும் அபாயத்திற்கு உள்ளாக்கும்.
- நமது பாரம்பரியம் நம் எல்லோருக்கும் உடையதாகும் - அழிந்த, சரித்திர முக்கியம் வாய்ந்த அவற்றை சேதமாக்காமல் இருப்பதில் கவனமாக இருக்கவும்.

- சாதனங்களையும் கால்நடைகளையும் அவ்வாறே விட்டு விடவும். விலங்குகள் கஷ்டத்தில் இருக்கின்றன என நீங்கள் நினைத்தாலும் அவற்றுடன் குறுக்கிட வேண்டாம். அதற்கு பதிலாக விவசாயியிடம் அதனைத் தெரிவிக்கவும்.

## தாவரங்கள் மற்றும் விலங்குகளைப் பாதுகாக்குங்கள். உங்கள் குப்பையை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள்

நமது நாட்டுப்புறங்களை இப்போதும் நமது வருங்கால சந்ததியினருக்காகவும் பாதுகாக்க நமக்கு பொறுப்பு இருக்கிறது. ஆகையினால் நீங்கள் விலங்குகளையும், பறவைகளையும், தாவரங்களையும், மரங்களையும் சேதப்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.

- குப்பைகளும், மீதி உள்ள உணவும் நாட்டுபுற அழகை கெடுத்து விடுவதோடு அல்லாமல், அவை காட்டு விலங்குகளுக்கும் பண்ணை விலங்குகளுக்கும் ஆபத்தானவையாகும். அவைகளால் நோய்களும் பரவலாம். ஆகையினால் உங்கள் குப்பைகளை உங்களுடன் வீட்டிற்கு எடுத்துச் செல்லவும். குப்பைகளை கீழே போடுவதும், வேண்டாதவற்றைக் குவிப்பதும் சட்டப்படி குற்றமாகும்.
- இயற்கைச் சூழ்நிலையின் அழகை கண்டுபிடியுங்கள். பாறைகள், தாவரங்கள் மற்றும் மரங்கள் போன்றவற்றின் சிறப்பினை சேதப்படுத்தாமல், அழிக்காமல் அல்லது விலக்காமல் இருக்க சிறப்புக் கவனம் எடுத்துக் கொள்ளுங்கள். அவை காட்டு விலங்களுக்கு இருப்பிடத்தையும், உணவினையும் அளிக்கின்றன. மேலும் நாட்டுப்புறத்தில் உள்ளவர்கள் எல்லோருக்கும் இது மகிழ்ச்சியினைக் கூட்டுகிறது.
- காட்டு விலங்குகளுடனும் பண்ணை விலங்குகளுடனும் மிகவும் நெருக்கமாகச் சென்றால், குறிப்பாக அவை சிறிய குட்டிகளாக இருந்தால், அவை எதிர்பாராதவாறு செயல்படலாம். ஆகையினால் நீங்கள் அவைகளுக்கு அதிக இடம் அளிக்க வேண்டும்.
- மக்களுக்கும் அவர்களின் பொருட்களுக்கும் தீயானது எவ்வாறு அழிக்கும் தன்மையுள்ளதோ, அதே போல விலங்குகளுக்கும் அவற்றின் பழக்க வழக்கங்களுக்கும் தீ அழிவினைத் தரக்கூடியது. ஆகையினால் தீக்குச்சியினையோ அல்லது அணைக்காத சிகரெட் துண்டினையோ எப்பொழுதும் கீழே போடாமல் கவனமாக இருக்கவும். அக்டோபர் முதல் ஏப்ரல் தொடக்கம் வரை, சமவெளிகளிலும் முட்புதர் காடுகளிலும் கட்டுப்படுத்தப்பட்ட நெருப்பு தாவர வளர்ச்சிக்கென பயன்படுத்தப்படுகிறது. ஆகையினால் **999** எண்ணை அழைப்பதற்கு முன்பாக, தீயானது யாருடைய மேற்பார்வையில் உள்ளது என சோதித்துக் கொள்ளவும்.

## உங்கள் நாய்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்

நாய்களைப் பயிற்றுவிக்க நாட்டுப்புறம் சிறந்த இடமாகும். ஆனால் நாயானது பண்ணை விலங்குகளுக்கோ, காட்டு விலங்குகளுக்கோ அல்லது இதர மக்களுக்கோ, ஆபத்தானதாகவோ அல்லது தொந்தரவானதாகவோ இல்லை என்பதை உறுதி செய்து கொள்ளுவது ஒவ்வொரு உரிமையாளருடைய கடமையாகும்.

- சட்டப்படி நீங்கள் உங்களுடைய நாயை உங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்க வேண்டும். அதனால் அது இதர பண்ணை விலங்குகளையோ அல்லது காட்டு விலங்குகளையோ தொந்தரவு செய்யாமலோ அல்லது பயமுறுத்தாமலோ இருக்க வேண்டும். மார்ச் 1 ஆம் தேதி முதல் ஜூலை 31 ஆம் தேதி வரை திறந்த நாட்டுப்புறத்திலும், பொது நிலங்களிலும், பண்ணை விலங்குகளின் அருகிலும் உங்கள் நாயை கயிற்றில் கட்டி உங்கள் கட்டுப்பாட்டில் வைத்து இருக்க வேண்டும்.

- பொது வழிகளில் உங்கள் நாய் உங்களின் நெருங்கிய கட்டுப்பாட்டிற்குள் இருந்தால், கயிற்றில் வைத்து இருக்க வேண்டாம். ஆனால் பொது விதியாக உங்கள் நாய் உங்களுக்குக் கீழ்படிந்து இல்லாமல் இருந்தால், அதை கயிற்றில் வைத்து இருக்கவும். உங்கள் நாய், விவசாயிகளின் விலங்குகளை காயப்படுத்தினாலோ அல்லது கஷ்டப்படுத்தினாலோ, உங்கள் நாயை அழிக்க சட்டப்படி விவசாயிகளுக்கு உரிமை உண்டு.
- ஒரு பண்ணையில் பண்ணை விலங்கு ஒன்று உங்களையோ அல்லது உங்கள் நாயையோ துரத்தினால், உங்களின் நாயை கயிற்றில் இருந்து விட்டு விடுங்கள்- அதனை பாதுகாக்க எண்ணி உங்களை அபாயத்திற்கு உட்படுத்திக் கொள்ளாதீர்கள்.
- உங்களின் நாய், வெள்ளாடுகளை அல்லது செம்மறியாடுகளை பயமுறுத்தாதவாறு இருக்கவும் அல்லது பறவைகளின் கூடுகளையும் இதர காட்டு விலங்குகளையும் தொந்தரவு செய்யாதவாறு இருக்கவும் உறுதி செய்து கொள்ளுங்கள் - குறிப்பாக, பெற்றோர் பாதுகாப்பில்லாமல் முட்டைகள் மற்றும் குட்டிகள் விரைவில் இறந்து விடும்.
- ஒவ்வொருவரும் நாயின் மலம் எவ்வளவு வெறுப்பைத் தரக்கூடியது என்றும் அது எவ்வாறு தொற்று நோய்களைப் பரப்பும் என்றும் அறிவார்கள். அதனால் எப்போதும் உங்களின் நாய் மலம் கழித்த பின்பு, சுத்தம் செய்து அசிங்கத்தை அகற்ற வேண்டும். மேலும் உங்களின் நாய்க்கு பூச்சி ஒழிப்பினை வழக்கமாக செய்ய வேண்டும்.
- சில நேரங்களில் திறந்தவெளியின் சில இடங்களில் நாய்கள் அனுமதிக்கப்பட மாட்டாது அல்லது கயிற்றிற்குள் வைத்து இருக்கத் தேவைப்படும். ஏதேனும் சைகைகள் இருந்தால் தயவு செய்து அவற்றைக் கடைபிடிக்கவும். இந்த சட்டங்கள் பற்றி **www.countrysideaccess.gov.uk** என்ற இணைதளத்திலிருந்து மேலும் அறிந்து கொள்ளலாம், அல்லது **openaccess@countryside.gov.uk** க்கு இமெயில் அனுப்பலாம் அல்லது **0845 100 3298** என்ற எண்ணில் தொலைபேசியில் அழைத்துத் தெரிந்து கொள்ளலாம்.

**மற்றவர்களையும் கருதுங்கள்**

இதர மக்களை அறிந்து கொள்ளுதலும், அவர்களுக்கு மதிப்பு கொடுத்தலும், நாட்டுப்புறத்தினை எல்லோருக்கும் ஒரு மகிழ்ச்சியான இடமாக ஆக்குகிறது - வீட்டில், வேலையிடத்தில் மற்றும் ஓய்வு எடுத்துக்கொள்ளுமிடத்தில் எல்லா இடத்திலும் மகிழ்ச்சி அளிக்கிறது.

- சிறிய நாட்டுப்புறச் சாலைகளில் சுறுசுறுப்பான போக்குவரத்து மகிழ்ச்சியற்றதும் மற்றும் உள்ளூர் மக்களுக்கும், வருகை தருவோர்களுக்கும், விலங்கினங்களுக்கும் ஆபத்தானதுமாகும். ஆகையால் அங்கெல்லாம் வேகத்தைக் குறைக்கவும். எங்கெல்லாம் இயலுமோ, உங்களின் வாகனத்தை வீட்டிலேயே விட்டு விடவும். மற்றவர்களுடன் பகிர்ந்து பயணம் செய்ய பார்க்கவும். பொது போக்குவரத்து அல்லது சைக்கிள் போன்றவைகளைப் பயன்படுத்தவும். பொது போக்குவரத்து பற்றிய விவரங்களுக்கு **0870 608 2608** என்ற எண்ணில் டிராவல் லைனை அழைத்துப் பேசவும் அல்லது பயனுள்ள தொடர்புகளுக்கு **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தைச் சென்று பார்க்கவும்.
- உள்ளூர் மக்களின் தேவைகளுக்கு மதிப்பு கொடுக்கவும் - எடுத்துக்காட்டாக, கதவு வழியினை, வாகனங்கள் செல்லும் வழியினை அல்லது இதர இடங்களில் உங்களின் வாகனத்தால் தடை செய்ய வேண்டாம்.

- பண்ணை விலங்குகள் ஒன்றாக சேரும் போதும் அல்லது செல்லும்போதும் பாதையில் இருந்து தள்ளி இருக்கவும் அல்லது விவசாயி தரும் அறிவுரைகளைக் கடைபிடிக்கவும்.
- சைக்கிளில் செல்லும் பொழுதோ அல்லது வாகனத்தை ஓட்டிச் செல்லும் பொழுதோ, குதிரைகள், நடந்து செல்பவர்கள், மற்றும் கால்நடைகளுக்காக வேகத்தைக் குறைத்துச் செல்லவும். அவைகளுக்கு அதிக இடம் அளிக்கவும். சட்டப்படி, சைக்கிளில் செல்பவர்கள் நடப்பவர்களுக்கும் குதிரையில் செல்பவர்களுக்கும் வழி விடவேண்டும்.
- கிராமபுரத்து பொருளாதாரத்திற்கு உதவி செய்யவும். எடுத்துக்காட்டாக, உங்களுக்குத் தேவையான பொருட்களை உள்ளூர் கடைகளில் வாங்கவும்.

**பொது தகவல்கள்**

எவ்வாறு எங்கு நாட்டுப்புறத்திற்குச் செல்வது என்றறிய, **www.countrysideaccess.gov.uk** இணைதளத்திற்குச் செல்லவும் அல்லது உள்ளூர் விசிட்டர் மையத்தினையோ அல்லது நூலகத்தினையோ தொடர்பு கொள்ளவும். (**www.yell.com** இணைதளத்தில் பட்டியல்களைப் பார்க்கலாம்).

அனைவரும் செல்லக்கூடிய பகுதிகள் மற்றும் உங்களுக்குள்ள உரிமைகள் பற்றிய தகவல்களுக்கு, **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தில் பார்க்கவும், **openaccess@countryside.gov.uk** க்கு இமெயில் அனுப்பலாம் அல்லது **0845 100 3298** என்ற எண்ணில் தொலைபேசியில் அழைத்தும் தெரிந்து கொள்ளலாம்.

சிறப்புப் பாதுகாப்புப் பகுதிகளில் நடப்பதற்கும் சவாரி செய்வதற்கும் பற்றிய தகவல்கள் மற்றும் வரைபடங்கள் பெற, **www.countrywalks.defra.gov.uk** இணைதளத்தைப் பார்க்கவும்.

குறிப்பிட்ட வட்டாரங்களுக்குச் செல்லுவதில் சிக்கல்கள் இருந்தால் அல்லது உங்கள் உரிமைகள் பற்றி தெரிந்து கொள்ள, உள்ளூர் அரசாங்கம் தொடர்பான கண்ட்டிரிசைட் அல்லது ரைட்ஸ் ஆப் வே டிபார்ட்மெண்ட் அல்லது நேஷனல் பார்க் அதாரிட்டியுடன் உதவிக்காக தொடர்பு கொள்ளவும்

ஸ்காட்லாண்ட் மற்றும் ஸ்காட்டிஷ் அவுட்டோர் அக்ஸஸ் பற்றி மேலும் தகவல்களுக்காக ஸ்காட்டிஷ் ஹெறிடேஜ் இணைதளம் **www.snh.org.uk/soac** பார்க்கவும்.

வேல்ஸ் மற்றும் வெல்ஷ் கண்ட்டிரிசைட் கோட் **www.ccw.gov.uk** தைப் பார்க்கவும்.

## நாட்டுப்புற விதிமுறைகள் - நில நிர்வாகிகளுக்கு ஆலோசனை

நாட்டுப்புறங்களுக்கு வருகை தருவோர்கள் உள்ளூர் பொருளாதாரத்திற்கு முக்கிய வருமானத்தை அளிக்கிறார்கள். பலர் தெரிந்த ஒரு பாதையினையே பின்தொடர விரும்புகிறார்கள், கதவுகள் போன்ற சரியான வழியினைப் பயன்படுத்துவதையே விரும்புகிறார்கள், பொதுவாக சரியானவற்றினை செய்வதையே விரும்புகிறார்கள் – ஆனால் உங்களின் உதவி அவர்களுக்குத் தேவைப்படுகிறது.

**உங்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் சட்டக்கடப்பாடுகளைத் தெரிந்துகொள்ளுங்கள்**

- உங்களின் நிலத்தில் மக்கள் எங்கே போகலாம்?
- உங்களின் நிலத்தில் மக்கள் இருக்கும் பொழுது என்ன சட்டங்கள் அவர்களுக்குப் பொருந்தும்?
- மற்ற மக்கள் உங்கள் நிலத்தில் இருக்கும் பொழுது உங்களின் உரிமைகளும் பொறுப்புகளும் என்ன?

**வருகை தருபவர்கள் பொறுப்பாக செயல்பட, அவர்களுக்கு எளிதாக்குங்கள்**

- மக்கள் உங்கள் நிலத்தில் பொறுப்பாக நுழைந்து வருவதற்கு எவ்வாறு நீங்கள் உதவலாம் மற்றும் அதே சமயத்தில் எவ்வாறு நாட்டுப்புற விதிகளைக் கடைபிடிக்கலாம்?
- எந்த உதவி மற்றும் அறிவுரைகளை நீங்கள் பெறலாம்?

**வருகை தருவோர்களின் பாதுகாப்பிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களைக் கண்டறியுங்கள்**

- உங்கள் நிலத்தில் இருக்கும் மக்களின் பாதுகாப்பிற்கு ஏதாவது அபாயங்கள் இருந்தால், அதனை நீங்கள் எவ்வாறு கையாளுவீர்கள்?

## உங்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் சட்டக்கடப்பாடுகளைத் தெரிந்துகொள்ளுங்கள்

- வருகை தருவோர்கள் நிலத்தை அடைய பல வழிகளில் அனுமதிக்கப்படுவார்கள். இது உங்களையும் உங்களின் உரிமைகளையும், பொறுப்புகள் மற்றும் சட்டக்கடப்படுகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதற்கு மேலும் தகவல்கள் பெற, உங்களின் உள்ளூர் அரசாங்க அதிகாரி அல்லது நேஷனல் பார்க் அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும். மேலும் **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தில் நில நிர்வாகிகள் பிரிவில் பார்க்கவும்.
- ஆர்டினன்ஸ் சர்வேயின் 1:25,000 வரைபடங்கள், பொது பாதைகள் உரிமையினையும் திறந்தவெளியின் குறிப்பிட்ட பிரிவுகளையும் காட்டுகிறது. இந்த வரைபடங்கள் பொதுவாக நம்பகதன்மை உடையவை, ஆனால் நிச்சயமற்றவற்றவை. ஆதலால் செல்லும் உரிமையின் சட்டபூர்வமான நிலைமையினை உள்ளூர் அரசாங்கத்திடம் சோதித்துக் கொள்ளவும். எந்தப் பிரிவு நிலங்களின் நுழைவு, வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன என்பதை **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தில் கண்ட்டிரிசைட் அண்ட் ரைட்ஸ் ஆப் வே ஆக்ட் 2000 கீழ் கண்டறிந்து கொள்ளலாம்.
- சட்டப்படி நீங்கள் உரிமையுள்ள பாதைகளை தடையின்றி வைத்திருக்க வேண்டும். நிலத்தில் மக்களின் நுழைவினை தடை செய்யக்கூடாது. தவறான சைகைகள் மூலம் பொது பாதையில் வருவதை குறைப்பது சட்டப்படி குற்றமாகும்.
- நுழையக்கூடாத வழியில் செல்லுவது வழக்கமாக திட்டமிடாத ஒன்றாகும். நுழையக்கூடாத வழியில் செல்வதைக் கையாள **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தில் லாண்ட் மானேஜர் பிரிவில், "மானேஜிங் பப்ளிக் அக்ஸெஸ் அட்வைஸ் ஷீட்" களை பார்க்கவும். மாறாக ஓபன் அக்ஸெஸ் தொடர்பு மையத்தினை **0845 100 3298** என்ற எண்ணில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அதன் நகலைக் கேட்கவும்.

## வருகை தருவோர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளுவதை எளிதாக்குங்கள்

- பாதைகள், எல்லைகள் ,வழி குறிப்புகள், சைகைகள், கதவுகள், கதவுகளுடன் உள்ள வழிகள் அனைத்தையும் நல்ல முறையில் வைத்திருக்கவும். இவைகள் மூலம் மக்கள் உங்கள் நிலத்தில் நுழைவதை நிர்வகிக்க உதவி செய்யும். உங்களின் உள்ளூர் அதிகாரி அல்லது நேஷனல் பார்க் அதாரிடியினை தொடர்பு கொண்டு என்ன உதவி இருக்கின்றன என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.
- எங்கு எல்லை வழியே ஒரு வேலி அல்லது புதர்களுக்கு நடுவில் பொது நுழைவு இருக்கிறதோ, உங்களால் முடிந்தால் ஒரு இடைவெளியினைப் பயன்படுத்துங்கள். இது முடியாவிட்டால், நுழையக்கூடிய வகையில் ஒரு கதவினை அல்லது மிகவும் அவசியமானால் விலங்குகள் அல்லாமல் மனிதர்கள் மட்டும் பயன்படுத்தக்கூடிய படிக்கட்டுகளைப் பயன்படுத்துங்கள். புதிய கதவினைப் பொருத்தும் பொழுது நீங்கள் உள்ளூர் அதிகாரியின் அனுமதி பெற்றிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
- தேவைப்படுமிடத்தில் தெளிவான, அன்பான வழிகாட்டுதலுடன் உங்களின் விருப்பங்களுக்கு மதிப்பு கொடுப்பதை ஊக்குவிக்கவும். எடுத்துக்காட்டாக, வருகை தருவோர்களிடம் உங்களின் நில நிர்வாக செயல்பாடுகளைக் கூறுவதன் மூலம், உங்களின் வழியில் அவர்கள் வருவதைத் தடுக்கலாம்.
- குப்பைகள் மற்ற குப்பைகளை ஈர்க்கும் - பண்ணைக் கழிவுகள் போன்றவைகளை ஒழித்துவிட்டால், நீங்கள் குப்பைகளை சட்டவிரோதமாகப் போடுவதை (சட்டத்திற்குப் புறம்பாக குப்பைகளைப் போடுதல்) தவிர்க்க முடியும். மேலும் மற்றவர்களும் பொறுப்பில்லாமல் குப்பைப் போடுவதை ஊக்குவிக்காமல் இருக்கமுடியும்.

## வருகை தருவோர்களின் பாதுகாப்பிற்கு ஏற்படும் அபாயங்களைக் கண்டறியுங்கள்

- ஆக்குபையர்ஸ் லையபிலிடிஸ் சட்டங்கள் 1957 மற்றும் 1984 ஆம் வருடங்களின்படி, உங்களின் கவனிப்புப் பணியானது நுழையும் வகையினைப் பொறுத்துள்ளது - ஆகையால் உங்களின் நிலத்திற்குப் பொருந்தக்கூடிய உரிமைகள் என்ன என்பதனைத் தெரிந்து கொள்வது முக்கியமாகும். கண்டிரி லாண்ட் அண்ட் பிசினெஸ் அசோசியேஷனை **020 7235 0511** என்ற எண்ணில் அல்லது நேஷனல் பார்மர்ஸ் யூனியனை **0870 845 8458** என்ற எண்ணில் தொடர்பு கொண்டு மேலும் ஆலோசனை பெறுங்கள்.
- உங்கள் நிலத்தில் மனிதர்களால் மற்றும் இயற்கையினால் ஏற்படும் ஆபத்துக்களைக் கருத்தில் கொண்டு, அவை பொது மக்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை எனில், அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
- மின்சார வேலி மற்றும் இதர ஆபத்து விளைவிக்கும் பொருட்களை மக்கள் வருகை தரும் இடங்களில் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். குறிப்பாக குறுகிய பாதைகள் மற்றும் ஒரு குழந்தையின் உயரம் உள்ள இடங்கள். பின்னப்பட்ட கம்பிக்கு பதிலாக சாதாரண கம்பி பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படுகிறது.
- பொது பாதை இருக்குமிடத்தில் வருகையாளர்களைத் தாக்கும் விலங்குகளை சுதந்திரமாக சுற்ற அனுமதிக்கக்கூடாது - தாக்கப்பட்டால் நீங்கள் அதற்குப் பொறுப்பாக நேரிடும்.

**நில நிர்வாகிகளுக்கானத் தகவல்கள்**

மானேஜிங் பப்ளிக் அக்ஸெஸ் அட்வைஸ் பிரதிகளுக்கு **www.countrysideaccess.gov.uk** இணைதளத்தில் லாண்ட் மானேஜர் பிரிவினைப் பார்க்கவும்
அல்லது ஓபன் அக்ஸெஸ் காண்டாக்ட் மையத்திற்க்கு **0845 100 3298** தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.
கண்ட்டிரிசைட் அண்ட் ரைட்ஸ் ஆப் வே சட்டத்தின்படி நுழைவு உரிமைகள் பற்றிய வரைபடங்களுக்கும் தகவல்களுக்கும் **www.openaccess.gov.uk** இணைதளத்தில் லாண்ட் மானேஜர் பிரிவினைப் பார்க்கவும் அல்லது ஓபன் அக்ஸெஸ் காண்டாக்ட் மையத்திற்க்கு
**0845 100 3298** தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பிட்ட வட்டாரங்கள் அல்லது நுழைவு உரிமைகள் பற்றிய சிக்கல்களுக்கு உங்களின் உள்ளூர் அரசாங்கத்தின் கண்ட்டிரிசைட் அண்ட் ரைட்ஸ் ஆப் வே பிரிவினையோ அல்லது சம்பந்தப்பட்ட நேஷனல் பார்க் அத்தாரிடியினை உதவிக்காக தொடர்பு கொள்ளவும்;
**www.countrysideaccess.gov.uk** இணைதலத்தைப் பார்க்கவும் அல்லது பட்டியல்களுக்காக உள்ளூர் தொலைபேசி புத்தகத்தைப் பார்க்கவும்.